மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 343, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

343—

காடுகளை மேம்படுத்துதல்

***28653—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள தரம் குன்றிய காடுகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் தரம் குன்றிய காடுகள் மண்ணிற்கேற்ற மரங்கள் நடுதல், தடுப்பணை, கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு வசதிகள் அமைத்தல் போன்ற பணிகள்மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளை சாதனைகளாக்கி, சாத்தான்களை விரட்டியடித்து, கருணா என்ற காளானை கலங்க அடித்து, வாரிசு அரசுகளை வணங்க வைத்து, 37 தொகுதிகளைக் கையில் அடக்கி, மூன்றாண்டுகளில் 300 ஆண்டுகள் சாதனை படைத்த, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சங்கரபதி, அமராவதி, சங்கராபுரம், சூரக்குடி, புதுவயல், மஞ்சரைக்காடு, ஜெயங்கொண்டான், வேலாயுதப்பட்டினம்,

வேப்பங்குளம், கருங்குளம், நாட்டரசன்கோட்டை, வெற்றியூர், மதவுப்பட்டி, ஏரியூர், கண்டாங்கிப்பட்டி, கட்டனூர், கண்டனூர், மாத்தூர், புஞ்சனை, பூவயல், பூகண்ணனூர், காட்டூர், மாடக்கோட்டை உள்ளிட்ட 25 காடுகள் எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் இருந்தன. சுதந்திரப் போராட்ட வீரர்களான மாமன்னர் மருதுபாண்டியர், வீரமங்கை வேலுநாச்சியார் போன்றவர்கள் இந்தக் காடுகளில் மறைந்திருந்துதான் அன்றைக்கு வெள்ளையர்களை எதிர்த்துப் போராடினார்கள். இத்தகைய காடுகள் இன்றைக்கு சமூக விரோதிகளால் அழிக்கப்பட்டு, அவர்கள் அந்தக் காடுகளில் உள்ள மரங்களையெல்லாம் திருடிச் சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, சிவகங்கை மாவட்டத்திலுள்ள அந்தக் காடுகளை மீண்டும் பராமரித்து, பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 6,250 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட தரம் குன்றிய காடுகள் ரூபாய் 6 கோடியே 25 இலட்சம் செலவில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளன. மண்ணிற்கேற்ற மரங்கள் நடவு செய்தல், தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டை, மழைநீர் சேகரிப்பு வசதி ஆகியவை அமைத்தல், காடுகளையொட்டி வாழுகின்ற கிராமத்தினர், காடுகளில் கால்நடைகளை மேய்ப்பதைத் தடுக்கும்பொருட்டு, அவர்களுக்கு மாற்றுத் தொழில் செய்ய உதவி செய்தல் ஆகியவற்றின்மூலம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள தரம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அங்கு தரம் குன்றிய மண்ணில் வளரக்கூடிய ஆவி, வெம்பாலை, பரம்பை, சிசு, நீர்மருது, ஆச்சான், வேங்கை, செம்மரம், முசில், உடை, வேம்பு, நாவல் மற்றும் புங்கம் ஆகிய மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 66—வது பிறந்த நாளையொட்டி, மாவட்டத்தில் 2 இலட்சத்து 6 ஆயிரத்து 250 மரக் கன்றுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தரம் குன்றிய காடுகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டு, நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காடுகளின் பரப்பளவு 20,347.98 ஹெக்டேர் ஆகும். தரம் குன்றிய காடுகளின் பரப்பளவு 7,049.08 ஹெக்டேர் ஆகும். காடுகளின் தரம் குன்றுவதற்கு வறட்சி மற்றும் கால்நடை மேய்ச்சலே முக்கிய காரணங்களாகும். சிவகங்கை மாவட்டத்திலுள்ள 12,649.29 ஹெக்டேர் காடுகள், தமிழ்நாடு வனக் கோட்டக் கழகத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டு, அதிலே கூழ் மரங்கள், முந்திரி மரங்கள் வளர்க்கப்பட்டு, அறுவடை செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 344, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

344—

சீரமைத்தல்

***30271—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், செல்லப்பம்பாளையத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் பழைய கட்டடத்தின் பிரசவ வார்டில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் புதிய கட்டடத்தின் பராமரிப்புப் பணிகள்